**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
**சென்னை** - 600 006.

**பெறுநர்**

அனைத்து மாவட்ட அரசுத்
தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.

**ந.க.எண். 023720 / எச்1 / 2022** **நாள். 31.01.2023**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் - பத்தாம் வகுப்பு /மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள், மார்ச்/ஏப்ரல் 2023 - தனித்தேர்வர்களின் தக்கல் விண்ணப்பங்களை ஆய்வு செய்ய அறிவுறுத்தல் - தொடர்பாக.

**பார்வை:** இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள்.30.01.2023

-----

மாண்புமிகு தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின் அறிவிப்பின்படி, மேற்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்க தவறிய பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு தனித்தேர்வர்கள் தற்போது தக்கல் முறையில் **இன்று 30.01.2023 முதல் 01.02.2023 வரையிலான நாட்களில் மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களில் (Government Examinations Service centres) நேரில் சென்று தேர்வுக் கட்டணத்துடன் கூடுதலாக ரூ.1000/- (மேல்நிலை) / ரூ.500 (பத்தாம் வகுப்பு) சிறப்பு கட்டணமாக செலுத்தி ஆன்லைனில் விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ள** வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சேவை மையங்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மற்றும் தேர்வுக் கட்டணத் தொகையினை ஆன்லைனில் செலுத்தியபிறகு பெறப்படும் இரசீது (Payment Receipt) ஆகியவற்றை சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களில் 02.02.2023 **அன்று** ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் (தக்கல்) விண்ணப்பங்களை பதிவு செய்யும் நாட்கள் | 30.01.20203 **முதல்** 01.02.2023 **வரை** |

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் மற்றும் தேர்வர்களின் தேர்வுக் கட்டணத் தொகை மற்றும் ஆன்-லைன் கட்டணத்தொகையினை செலுத்திய பிறகு பெறப்படும் Payment Receipt-ஐ சேவை மையத்தினர் சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டிய நாள் | 02.02.2023 |

**அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களில் இருந்து பெறப்படும் தக்கல் விண்ணப்பங்களை ஆய்வு செய்தல்**

. மேற்குறிப்பிட்டுள்ளவாறு, 02.02.2023-ல் அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களிலிருந்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பெறப்படும் விண்ணப்பங்களை முழுமையாக ஆய்வு செய்து, பத்தாம் வகுப்பு மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வெழுத விண்ணப்பதாரர்கள் முழுத்தகுதி பெற்றுள்ளனரா என்பதை உறுதி செய்யுமாறும், விண்ணப்ப இணைப்புகள் முழுமையாக உள்ளனவா என்பதை சரிபார்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தகுதியில்லாத தேர்வர்கள் விண்ணப்பித்திருப்பின், அத்தகைய விண்ணப்பங்களின் விவரத்தினை கீழ்க்காணும் படிவங்களில் உள்ளவாறு பட்டியலாக தயாரித்து, பெயர், பிறந்த தேதி, பாடக்குறியீட்டு எண், பயிற்று மொழி, இதர விவரங்கள் ஆகியவற்றில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் அதனையும் பட்டியலிட்டு ( பத்தாம் வகுப்பு, முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு என தனித்தனியாக) அவற்றை 03..02.2023 அன்று dgeh4sec@gmail.com, (மேல்நிலை) dgesslcb4section@gmail.com (பத்தாம் வகுப்பு) என்ற மின்னஞ்சல் முகவரிக்கும், அரசுத் தேர்வுகள் இயக்கக இணை இயக்குநர் (மேல்நிலை) மற்றும் அரசுத் தேர்வுகள் இயக்கக இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் பெயரிட்ட முகவரிக்கும் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| S. No. | Name | Date of Birth | Application No. | Remarks (Deletion) |
|---|---|---|---|---|
| | | | | |

**<u>அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களிலிருந்து பெறப்பட்ட தேர்வுக் கட்டண Payment Receipt மற்றும் Final Summary Report</u>**

அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களிலிருந்து (Service Centres) பெறப்பட்ட, பத்தாம் வகுப்பு, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் விண்ணப்பங்களுக்கான கட்டணத் தொகை மற்றும் ஆன்-லைன் கட்டணத் தொகையினை www.karuvoolam.tn.gov.in இணையதளத்திற்கு சென்று செலுத்தியதற்கான Payment Receipt மற்றும் Summary Reports ஆகியவற்றை உதவி இயக்குநர்கள் பாதுகாப்பில் வைத்துக் கொண்டு, அவற்றின் நகல்களை மட்டும் 03.02.2023-**க்குள்** துணை இயக்குநர் (பொது) அவர்களின் பெயரிட்ட முகவரிக்கு பதிவஞ்சலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாற்றுத்திறனாளித் தேர்வர்களது விண்ணப்பங்களையும், அவற்றுடன் இணைக்கப்பட்ட தகுதிச் சான்றுகளையும் ஆய்வு செய்த பின்னர், அப்பட்டியலையும் (உரிய மருத்துவச் சான்று நகல் இணைப்புகளுடன்) அப்பட்டியலின் soft copy ஒன்றினையும் இணைத்து 03.02.2023-**க்குள்** அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-

**இயக்குநர்**

**<u>நகல்</u>**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. கண்காணிப்பாளர்கள், பி4, எச்.4 மற்றும் அ3 பிரிவுகள் (அலுவலகம்).